**OS.NO. 26/2020 DW-1**

நாள் : 04.08.2025

பெயர் : ஆறுமுகம்

த/பெ : அப்பாசாமி

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் சொந்த ஊர் என்ன என்றால் மருதம்பாக்கம். நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் 9 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். கையெழுத்து போட தெரியுமா என்றால் தெரியும். ஆங்கிலத்தில் போட தெரியுமா தமிழில் போட தெரியுமா என்றால் ஆங்கிலத்தில் போட தெரியும். ஆங்கிலம் படிக்க தெரியுமா என்றால் இல்லை படிக்க தெரியாது கையொப்பம் மட்டும் செய்வேன். தமிழ் மட்டும் படிக்க தெரியும். எனக்கு எதிராக யார் வழக்கு போட்டுள்ளது என்றால் குப்பன் என்பவர் போட்டுள்ளார். என்ன வழக்கு என்றால் வீட்டு மனை விவகாரமாக வழக்கு போட்டுள்ளார். யார் வீட்டு மனை தொடர்பாக வழக்கு தொடரப்பட்டுள்ளது என்றால் எனது வீட்டு மனை வழியாக வழி வேண்டும் என்று வழக்கு போட்டுள்ளார். எனது வீட்டு மனையும் வாதியின் வீட்டு மனை பக்கத்து பக்கத்தில் உள்ளதா என்றால் வாதியின் வீட்டிற்கு தெற்கு பக்கமாக என் வீடு அமைந்துள்ளது. என்னுடைய வீடு கான்கிரீட் வீடா அல்லது கூரை வீடா என்றால் குருப் ஹவுஸ் வீடாகும்.

எனது வீட்டிற்கும் வாதி வீட்டிற்கும் அருகே மற்றவர்கள் மனை உள்ளதா என்றால் எனது வீட்டிற்கு எதிரே வாதிகள் குப்பன் மற்றும் அவரது மகன் பாலாஜியின் வீடு உள்ளது. வேறு யார் வீடும் இல்லை. சுப்பிரமணியன் மகன் வடிவேல் மற்றும் வெங்கடேசன், காசிநாதன் ஆகியோர்களின் காலி மனை உள்ளது. எனது வீட்டிற்கு எந்த பக்கதில் பிழக்கடை உள்ளது தெற்கு புறமாக உள்ளது. அந்த தெற்கு புறம் எனக்கு ஒரு வழி உள்ளது என்றால் இல்லை. எனது மனைக்கு வேறு எந்த பக்கத்தில் வழி உள்ளது என்றால்

கிழக்கு பக்கத்தில் வழி உள்ளது. எனது வீட்டின் செக்குபந்தி என்ன என்றால் கிழக்கு பக்கம் சின்னதாய் வீட்டு மனை, தெற்கு பக்கம் எனது வீடு அதாவது பிழக்கடை உள்ளது, மேற்கு பக்கம் ஐயாசாமி மகன் ஏழுமலை வீடு உள்ளது, வடக்கு பக்கம் குப்பன் மகன் பாலாஜி வீடு அமைந்துள்ளது. தெரு எந்த பக்கம் அமைந்துள்ளது என்றால் எனது வீட்டிற்கு வடக்கு புறமாக உள்ளது. குப்பன் வீட்டு மனைக்கும் வடக்கு புறத்தில் தான் தெரு அமைந்துள்ளது.

எனது சொத்து ஆதியில் யாருடைய பெயரில் இருந்தது என்றால் எனது அம்மா வள்ளியம்மாள் பெயரில் இருந்தது. அவருக்கு அவரது தாத்தா வழியாக வந்தது. வள்ளியம்மாள் பெயரில் பத்திரம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். வள்ளியம்மாள் பெயரில் பத்திரம் உள்ள விவரத்தை எனது பதிலுரையில் அளித்துள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் எனது பதிலுரையில் அவ்வாறு எதுவும் குறிப்பிடவில்லை என்றாலும் வள்ளியம்மாள் பெயரில் உள்ள எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் தாக்கல் செய்ததாக தவறாக கூறுகிறேன் என்றாலும் இல்லை. வாதி குப்புசாமி, பாலாஜி ஆகியோரின் பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. எனது பட்டா எண் என்ன என்றால் 532 ஆகும். வாதி வழக்கு தொடுத்துள்ள சர்வே எண் தெரியுமா என்றால் 250/1 சர்வே எண் ஆகும். என் சொத்து சர்வே எண் என்ன என்றால் 250/1 ஆகும். தற்போது சாட்சி வாதியின் சர்வே எண் நினைவில்லை என்று கூறுகிறார்.

எனது அம்மா பெயரில் இருந்தது கூட்டு பட்டா என்றால் சரிதான். கூட்டாக வேறு யார் பெயர் உள்ளது என்றால் மகாதேவன், சுப்பிரமணி, பழனி, ஆறுமுகம் ஆகியோர்கள் பெயரில் உள்ளது. என் வீட்டின் நீளம், அகலம் என்ன என்றால் பத்திரத்தை பார்த்தால் தெரியும். வள்ளியம்மாள் எனது பெயரில் தனியாக பத்திரம் எழுதி கொடுத்தாரா என்றால் இல்லை. நான்

பத்திரத்தை பார்த்து சொல்ல வேண்டும் என்று கூறுவது எனது அம்மாவின் பத்திரத்தை தான் கூறுகிறேன் என்றால் சரிதான். எனது தயார் பெயரில் இருந்த அசல் ஆவணம் யாரிடம் உள்ளது என்றால் என்னிடம் தான் உள்ளது. கூட்டு பட்டாவில் தோராயமாக எவ்வளவு அளவு நிலம் உள்ளது என்றால் தோராயமாக சொல்ல இயலாது பத்திரத்தை பார்த்து தான் கூற முடியும். கூட்டு பட்டாவில் உள்ள அனைவருக்கும் எந்த வழியாக பாதை உள்ளது என்றால் அவர்கள் வீதி ஓரத்தில் உள்ளார்கள் எனக்கு மட்டும் எனது மனைக்கு வடக்கு பக்கமாக வழி உள்ளது. அந்த வீதி எந்த திசையில் இருந்து எந்த திசையில் செல்கிறது என்றால் கிழக்கு – மேற்கு வீதியாகும்.

வாதிள் அவர்கள் சென்று வர இருந்த பாதையை அடைத்து வடக்கு தெற்காக உள்ள பொது வழி பாதையை அடைத்து நான் தடுப்பு சுவர் அடைத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு முன் பாலாஜியின் வீடு உள்ளது என்றால் சரிதான். முன் என்றால் எந்த திசையில் உள்ளது என்றால் வட திசையாகும். 2 ம் வாதி எனது வீட்டை தாண்டி தான் பொதுவழிக்கு செல்ல வேண்டும் என்றால் இல்லை. வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் அவரின் பாதையை நான் அடைத்ததால் தான் வழக்கு தொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு வடக்கு புறமாக ஒரு வீதி உள்ளதாக சொல்லியுள்ளேன் அந்த வீதியின் அளவு சுமார் 15 அடி இருக்கும்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

SADASIVAM POORNIMA

District Munsif cum Judicial Magistrate, Ranipet
Digitally signed by SADASIVAM POORNIMA
Date: 2025.08.05 17:47:54 +0530

District Munsif cum Judicial Magistrate,
Ranipet.